**செய்தி வெளியீடு எண் : 2197** **நாள் : 05.12.2022**

**செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் "பாரதி யார்" இயல், இசை, நடனம் கலந்த வரலாற்று நாடகத்தை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர் பாபு ஆகியோர் தொடங்கி வைக்க உள்ளார்கள்.**

செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் "பாரதி யார்" இயல், இசை, நடனம் கலந்த வரலாற்று நாடகம் 07.12.2022 (புதன்கிழமை) அன்று மாலை 6.00 மணிக்கு சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலக வளாகத்திலுள்ள அண்ணா நூற்றாண்டு அரங்கில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர் பாபு அவர்கள் ஆகியோர் குத்துவிளக்கேற்றி தொடங்கிவைக்க உள்ளார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பாரதியார் நினைவைப் போற்றும் வகையில் அவர் மறைந்த நூற்றாண்டு நினைவாக 14 முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டார்கள். மகாகவி பாரதியாரின் நினைவு நாளான செப்டம்பர் 11–ஆம் நாள், அரசின் சார்பில் ஆண்டுதோறும் 'மகாகவி நாளாக' கடைப்பிடிக்கப்பட்டு வருவது போன்று அனைத்து அறிவிப்புகளும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. .

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பினை மிகச்சிறப்பாக செயல்படுத்திடும் பொருட்டு எஸ்.பி.கிரியேசன்ஸ் தயாரிப்பில் எஸ்.பி.எஸ்.ராமன் குழுவினரின் "பாரதி யார்" இயல், இசை, நடனம் கலந்த வரலாற்று நாடகத்தை முதற்கட்டமாக சென்னையில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் நடத்தப்பட உள்ளது. இந்நாடகம் இணையவழியிலும், அரசு கேபிள் டிவியிலும் ஒளிபரப்பு செய்யப்படும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in